


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.07.2024) தலைமைச் செயலகத்தில், குழந்தை கடத்தல் தடுப்பு மற்றும் போதை பொருள் தடுப்பில் சிறந்து விளங்கியமைக்காக ஒன்றிய அரசின் விருது பெற்ற மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன், சமூக பாதுகாப்பு இயக்குநர் அமர் குஷ்வாஹா ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.07.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சி. ஃபெர்னான்டஸ் ரத்தின ராஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம் ஆகியோர் உள்ளனர்.

### ஆஸ்திரேலியா - மெல்போர்ன் பல்கலைக் கழகத்தில்

# வேளாண் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

## பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல்!

சென்னை, ஜூலை 26 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டு பணிகள் தொடர்பான ஆய்வுகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் முன் னேற்றத்தை ஏற்படுத்துவது போன்ற பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசு முறை பயணமாக சென்றுள்ளது.

இக்குழுவில் வேளாண்மை உழவர் நலத்துறையின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடன் சென்றனர்.

இப்பயணத்தின் முதற்கட்டமாக நேற்று முன்தினம் 24.07.2024 ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில் நுட்ப பங்குகள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் காலநிலை மாற்றம், புதிய வகை பயிரினங்கள் அறிமுகம், வேளாண்மை - உழவர் நலத்துறையில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவது, மண்வளம் காப்பதற்கான நடவடிக்கை, பூச்சி நோய் தாக்குதலில் இருந்து பயிர்களைக் காப்பது, உயர் தொழில்நுட்ப வேளாண்மை முறைகளைத் தீவிரப்படுத்துவது, தோட்டக்கலை பயிர்களான பழ வகைப்பயிர்கள் மற்றும் மருத்துவ பயிர்களை கையாளுதல், அனைத்து வகை பயிர்களிலும் அறுவடைக்கு பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிகாட்டு முறைகள், உணவு வகைப் பயிர்களில் புதுமையை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான பயிற்சியை மேம்படுத்துதல், வேளாண்மைப் பாடங்கள் பயிலும் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்துதல் போன்றவை விவாதிக்கப்பட்டன.

வேளாண்மைத் தொழிலில் அரசு/துறை தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட கருத்து பரி மாற்றங்களை முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ்நாட்டில் நடை முறைப் படுத்தப்படும்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (24.7.2024) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை ஜோ அருண் – துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் குத்தூஸ் மற்றும் ஆணையத்தின் புதிய உறுப்பினர்களையும், சிறுபான்மையினர் பொருளா தாரம் மேம்பாட்டு கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஹாமில்டன் வெல்சன், ஏ. சுவர்ணராஜ், நாகூர் ஏ.எச். நஜிமுதின், பிரவீன் குமார் தாட்டியா, ராஜேந்திர பிரசாத், எம். ரமீத் கபூர், ஜே. முகமது ரஃபி, எஸ். வசந்த் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி. விஜயராஜ் குமார், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆணையர் வி. சம்பத், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம், ஆகியோர் உள்ளனர்.

# விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிவிப்பு!

விழுப்புரம், ஜூலை 26 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை வருமாறு:-



விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (27.07.2024 - சனிக்கிழமை) காலை 11 மணி அளவில் திண்டிவனம் ஜெ.வி.எஸ். திருமண மஹாலில் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில் நடைபெறுகிறது.

அவ்வமயம், மாநில, மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகச் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் :** நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணி வேந்தன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், வெற்றிக்கு உழைத்திட்ட கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிப்பது தொடர்பாக.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர். சிவா வெற்றிக்கு உழைத்திட்ட கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிப்பது தொடர்பாக.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவது தொடர்பாக.

கழக அரசின் சாதனைகளை விளக்கி பிரச்சாரம் செய்தல் தொடர்பாக.

இளைஞர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக.

இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்க்கையை துரிதப்படுத்தி கழகத்தில் புதிதாக சேர்ந்த உறுப்பினர்களுக்கு உறுப்பினர் உரிமை அடையாள அட்டை வழங்குவது.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வேப்பம்பட்டு பகுதியில் 'மக்களுடன் முதல்வர்' முகாம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்

திருவள்ளூர், ஜூலை 26 –

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், 25 வேப்பம்பட்டு 26 வேப்பம்பட்டு பெருமாள்பட்டு ஆகிய ஊராட்சிகளுக்கு மக்களுடன் முதல்வர் முகாம் வேப்பம்பட்டு பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இம்முகாமிற்கு ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் தலைமை தாங்கினார்.

வட்டாட்சியர் செ.வாசுதேவன், ஒன்றியக் கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ.) எம்.ஜி.குணசேகரன், (கி.ஊ.) கே.ரவி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சதாபாஸ்கர், ராஜேஸ்வரி சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டு மனுக்களை பெற்று சிறப்புரையாற்றினர்.

இதில் பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், ஒன்றிய நிர்வாகிகள் மு.ராஜா, இ.என்.சேகர் மற்றும் செவ்வை கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இதன் முன்னதாக பெருமாள் பட்டு ஊராட்சியில் உள்ள ரயில் நகர் பகுதியில் பொதுமக்கள் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில் அதற்கான 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைக்கும் பணி மற்றும் கால்வாய் அமைக்கும் பணியும் துவக்க விழா நடைபெற்றது.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சி, நெய்க்காரன்பாளையம் அரசு ஆரம்பப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இலவச சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து பார்வையிட்டார். இதில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இ.கே.பிரகாஷ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.முரளிசங்கர், மாவட்டக் கவுன்சிலர் கிருஷ்ணவேணி வரதராஜ், காங்கேயம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கருணை பிரகாஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நந்தினி ஸ்ரீதர் தலைமை! மயிலாடுதுறை மாவட்டம் - செம்பனார்கோயில் ஒன்றியத்தில்

# 700 பயனாளிகளுக்கு "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணை!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மயிலாடுதுறை, ஜூலை 26 -

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை சார்பில் செம்பனார்கோயில் ஒன்றியத்தில் 700 பயனாளிகளுக்கு "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியத்தில் "கலைஞர் கனவு இல்ல" திட்டத்தின் கீழ் 700 பயனாளிகளுக்கு வீடு கட்டி கொள்வதற்கான ஆணை வழங்கும் விழா செம்பனார்கோயில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு செம்பனார் கோயில் ஒன்றியக் குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமை தாங்கினார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல்மாலிக் ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி ஒன்றிய ஆணையர் மீனா வரவேற்றார்.

விழாவில் செம்பனார் கோயில் ஒன்றியத்தில் உள்ள 700 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொள்வதற்கான ஆணையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வழங்கி பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கொண்டு வந்த கலைஞர் கனவு இல்ல திட்டம் தமிழகத்தில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. முதமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் குடிசையில்லா தமிழ்நாடாக மாற்ற வேண்டும் என்று குடிசை வீடுகளை காங்கிரீட் வீடுகளாக மாற்ற வேண்டும் என்று 2009 ஆம் ஆண்டு 20 லட்சம் குடிசை வீடுகளையும் காங்கிரீட் வீடுகளாக மாற்ற கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார். திட்டம் கொண்டு வந்த முதல் ஆண்டு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்ட நிலையில் ஆட்சி மாற்றத்தின் காரணமாக திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இதையடுத்து கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் அவர்களின் கனவு திட்டத்தை தமிழகத்தில் மீண்டும் கொண்டு வந்து அனைத்து குடிசை வீடுகளையும் காங்கிரீட் வீடுகளாக மாற்றிட கலைஞர் கனவு இல்ல திட்டத்தை கொண்டு வந்துள்ளார்.

கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் மூலம் ஒரு வீட்டிற்கு ரூ.3,50,000 என்று இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடு கட்ட ரூ. 35 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் நம்முடை முதலமைச்சர் அவர்கள். மயிலாடுதுறை மாவட்டத்திற்கு இந்த ஆண்டிற்கு 3,000 வீடுகள் கட்ட ரூ. 105 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் படி செம்பனார்கோயில் ஒன்றியத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் இந்த ஆண்டு ரூ. 24.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 700 வீடுகள் கட்ட ஆணை வழங்கப் பட்டுள்ளது. ஆணை பெற்றவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் உடன் வீடுகளை கட்ட தொடங்க வேண்டும். வீடுகளை குறிப்பிட்ட காலத்தில் கட்டி கட்டும் போது ஒவ்வொரு நிலைக்கும் பெற வேண்டிய தொகையை பெற்று 3 முதல் 4 மாதத்திற்குள் வீடுகளை கட்டிட வேண்டும். வீடுகள் கட்டும் போது பயனாளிகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினர், வருவாய் துறையினர் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவார்கள், வீடுகளுக்கு மண் நிரப்புவது, காலத்தில் தொகையை விடுவிப்பது போன்றவற்றை அதிகாரிகள் உடனுக்குடன் செய்து தர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து. மகேந்திரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி. என்.சிவபாலன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள். பி. எம்.அன்ழகன், எம்.அப்துல் மாலிக், பஞ்சுகுமார்,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட், கபிலன், ஒன்றியக் குழு துணைத்தலைவர் பாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என். செந்தில், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் திருக்கடையூர் செந்தில் குமார், தங்கவேல், பாண்டு, தேவா, பரிதி, மகேஸ், ஆணையர்கள் மஞ்சுளா, மீனா, ஒன்றியக் கழக நிர்வாகிகள் சுப்பையன், தென்னரசன், பிரபாகர், சரவணன், சத்தியராஜ், அமுதா அன்பழகன், கே.எஸ்.கருணா, ஈச்சங்குடி இளங்கோ, கே.எஸ்.கருணாநிதி, நெடுஞ்செழியன், ஊராட்சி மன்ற தலைவர்கள் குமார், விஸ்வநாதன், சண்முகம், கோபி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கண்ணன், தாஸ், சக்கரபாணி, மருத்துவர் வீரப்பாண்டியன் மற்றும் கழகத்தினர் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை சார்பில் செம்பனார்கோயில் ஒன்றியத்தில் 700 பயனாளிகளுக்கு "கலைஞரின் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என். சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், ஒன்றியக் குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.என்.எஸ்.என்.செந்தில், ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்.